போட்டிருக்கிறார்கள். தண்ணீர் வசதி இருக்கிறது. பயிர் இன்சூரன்ஸ் திட்டம் பெயிலியராகப் போகாது. தாராளமாக நீங்களே அமல் நடத்த வேண்டும்.

கைத்தறியில் நீண்டநேரம் பேசவேண்டும். தனி சப்ஜெக்ட்டாக வரும்போது பேசுகிறேன். எங்களுடைய பகுதியைப் பொறுத்த மட்டில் கூட்டுறவுத் துறையில் நிறையக் கடன் வாங்கி விட்டோம். இனிமேல் திருப்பிக் கொடுக்க வழியில்லை. 3 வருடமாக இந்தக் கடனை புதிப்பித்து வருகிறோம். அதற்கு முன்னே 20வருடம் பட்ட கடனை இன்னும் கட்டவில்லை. வசூல் பண்ணுவதற்கு ஒன்றும் இல்லை. தயவுசெய்து இந்த அரசாங்கம் முதுகுளத்தூரை விசேஷ பகுதியாகக் கருதி கடன் தொல்லையிலிருந்து மீளுவதற்கு, அரசாங்கக் கடன்கள் கூட்டுறவுக் கடன்கள் அத்தனையும் ரத்து செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆட்டு லோன் கேட்டு ரொம்ப பேர்கள் எங்கள் பகுதியில் மனுப் போட்டிருக்கிறார்கள். குடியரசுத் தலைவர் ஆட்சியிலேயே நிறைய 'புரொவிஷன்' இருந்தது. கூட்டுறவு மூலமாகக் கொடுக்க வேண்டும். கூட்டுறவு சொசைட்டியின் மூலமாகக் கடன் கிடைப்பது என்பது ரொம்பக் குறைச்சல். 100 க்கு 10 சதவிகிதம் கூட கூட்டுறவு சொசைட்டியில் கடன் கொடுப்பது கிடையாது. மற்ற கூட்டுறவு சொசைட்டிகளில் லோன் கொடுக்கத் தகுதியில்லை என்று சொல்லுகிறார்கள். அதன் காரணமாக ம்க்கள் மத்தியிலே பெரிய அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. நான் ஆட்டு லோன் வாங்கித் தருவதாக வாக்குறுதி கொடுத்து ஜெயித்து வந்திருக்கிறேன். ஆகவே கூட்டுறவு சொசைட்டிகள் மூலம் கொடுக்காமல் அரசாங்கமே நேரடியாகக் கொடுப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-25 மணியளவில் ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்[illegible]ள்.

### A. *Statutory Rules and Orders.*

9. Notification issued in G.O.Ps. No. 1040, Commercial Taxes and Religious Endowments, dated 21st June 1977 in regard to certain amendments to the Tamil Nadu General Sales Tax Rules, 1959. [Laid on the Table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales TaxAct, 1959 (Tamil Nadu Act I of 1959].